**IN THE COURT OF THE ADDITIONAL ASSISTANT SUBORDINATE COURT, HOSUR**

Date : 22-08-2024

SC.32/2023

அ.சா. - 5 ஹரீஷ்குமார்

2024 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22ம் நாள் **ஹரீஷ்குமார்** என்பவரின் சாட்சியாக விசாரிக்கப்படுபவர் 1969ம் ஆண்டின் 54வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின்படி திருமதி. சு. ஸ்ரீவித்யா, பி.காம். எம்.ஏ.பி.எல்., சார்பு நதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஹரீஷ்குமார் | தந்தை பெயர் | எல்லப்பா |
| வயது | 29 | கிராமம் | கிருஷ்ணம்மாகொத்துார் |
| தாலுக்கா | ஓசூர் | மாவட்டம் | கிருஷ்ணகிரி |

**முதல் விசாரணை**

நான் கிருஷ்ணம்மாகொத்துார் வசித்துக்கொண்டு விவசாயம் மற்றும் செய்து வருகிறேன். கடந்த 11.07.2021 அன்று காலை 8.30 மணிக்கு சம்பவம் நடந்தது. பசவராஜ் கிருஷ்ணமூர்த்தியிடமிருந்து நிலம் வாங்கியிருந்தார் அந்த நிலத்திற்கு எருவு எடுத்துக்கொண்டு டிராக்கடரில் போய்க்கொண்டிருந்தார். ஆஜர் எதிரிகள் பசவராஜை வெட்டியதால் அவரை மருத்துவமனைக்கு கூட்டிக்கொண்டு போய்விட்டார்கள். நான் பக்கத்து தோட்டத்தில் இருப்பதால் இந்த விவரங்கள் எனக்கு தெரியும். சண்டையான சமயத்தில் ஆஜர் எதிரிகள் மூவரும் கண்டார ஓலி மகனே உங்களை என்னிக்காவது கொலை செய்யாமல் விடமாட்டோம் என்று பசவராஜை மிரட்டி சென்றார்கள். அன்று மதியம் சுமார் 2.00 மணியளவில் போலீசார் அன்னையப்பா வீட்டு அருகில் வந்திருந்தார்கள். அன்னையப்பாவிடமும் சுரேஷ்குமாரிடமும் வாக்குமூலம் பெற்றார்கள். அதில் என்னை கையொப்பம் போடச்சொன்னார்கள் நான் கையொப்பம் போட்டேன். அன்னையப்பா வாக்குமூலத்தில் அன்னையப்பாவும் இன்ஸ்பெக்டரும் நானும் வெங்டேசப்பா ஆகியோர் கையொப்பம் செய்தோம். சுரேஷ்பாபுவின் வாக்குமூலத்தில் சுரேஷ்பாபுவும் இன்ஸ்பெக்டரும் நானும் வெங்டேசப்பா ஆகியோர் கையொப்பம் செய்தோம். வாக்குமூலம் வாங்கிய சமயத்தில் நேரம் சுமார் 2 மணியிலிருந்து 3 மணியிருக்கும். அதன் பிறகு போலீசார் கத்தி, கடப்பாறை மற்றும் கட்டை ஆகியவைகளை எடுத்தார்கள். அதை பற்றி எழுதிக்கொண்டார்கள் அதிலும் நானும் வெங்டேசப்பாவும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ள அறிவாள், கட்டை, கடப்பாறை ஆகியவைகளால் தான் ஆஜர் எதிரிகள் சம்பவ தேதியில் எங்களை தாக்கினார்கள்.என்னிடம் காண்பிக்கப்படுகின்ற ஆவணமான அன்னையப்பா மற்றும் சுரேஷ்பாபு அவர்களுடைய ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான் அது **அ.சா.ஆ.3 மற்றும் 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காண்பிக்கப்படுகின்ற கைப்பற்றுதல் மகஜரில் உள்ள

முதல் கையொப்பம் என்னுடையது தான் அது **அ.சா.ஆ. 5** ஆகு குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் இது தொடர்பாக விசாரித்தார்கள்.

**வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

R SRIVIDYA

Digitally signed by R SRIVIDYA
Date: 2024.08.22 14:14:04 +0530